**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **35/2020** |
| | | P/W's | : | **PW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | K.நாகலிங்கம் | CASTE | : | |
| S/O | லேட். கருப்பையா | RELIGION | : | இந்து |
| VILLAGE | கச்சைக்கட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **55** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.04.2026**

**குறுக்கு விசாரணை**

1. நான் எனது பூசாரி தனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளேன். எனது பிராதிலும் நிரூபண வாக்கு மூலத்திலும் அனைத்து பிரதிவாதிகளும் கச்சைக்கட்டி தெற்கு தெருவில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 18.03.1941ல் ஆறு டிரஸ்டிகள் வழக்கு சொத்தை கிரையம் வாங்கியதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல, ஆறு பூசாரிகளும், டிரஸ்டிகளும் என்று உள்ளது.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிச்சை குடும்பன் என்பவரை மட்டும் தான் பூசாரியும் , டிரஸ்டியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ஆறு நபர்கள் உள்ளார்கள். மேற்படி ஆவணத்தில் ஆறு நபர்களை டிரஸ்டி என்று அதில் ஒருவரை மட்டும் பூசாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ஆறு பேரும் பூசாரி தான். மேற்படி ஆறு நபர்களில் பழனியாண்டி குடும்பன் என்பவர் ஒன்றும் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் சுப்ப குடும்பன் மகன் பழனியாண்டி குடும்பன் என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி தெற்கு தெருவில் உள்ளார், பத்திரத்தில் கண்டுள்ள பழனியாண்டி வடக்கு தெருவை சேர்ந்தவர்.

3. மேற்படி பத்திரத்திலுள்ள பழனியாண்டி என்பவர் வடக்கு தெருவை சேர்ந்தவர் என்பதை காட்டும் ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்திலும் பழனியாண்டி என்பவர் வடக்கு தெருவை சேர்ந்தவர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கை நான் பரம்பரை பூசாரியாக இருப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். நான் பரம்பரை பூசாரி என்பதை நிரூபணம் செய்ய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ஆறு டிரஸ்டிகள் வழக்கு சொத்தை கிரையம் வாங்கிய போது அதில் சக்தி மாரியம்மன் கோவில் இல்லை, அவர்கள் காலி இடமாக கிரையம் பெற்ற பின்தான் கோவில் கட்டினார்கள்.

4. ஆறு டிரஸ்டிகளும் அவர்களின் சமுதாய மக்களின் பொதுநலனுக்காக தான் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். ஆறு டிரஸ்டிகளும் அவர்களின் மக்கள் நலனுக்காக வடக்கு தெருவில் மாரியம்மன் கோவிலும், தெற்கு தெருவிலும் சக்தி மாரியம்மன் கோவிலும் கட்டி கொள்ளவதாக ஒப்பந்தம் செய்து கொண்டதாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்ததை ஆறு டிரஸ்டிகளும் எழுத்து பூர்வமாக ஆவணத்தில் எழுதவில்லை வாய் மொழியாக தான் ஒப்புக்கொண்டார்க்ள்.

5. ஆறு டிரஸ்டிகள் வழக்கு சொத்து கோவிலுக்கு எனது தாத்தா நாக குடும்பனையும், சந்தன குடும்பன் என்பவரையும் பூசாரியாக நியமித்தார்கள் என்று பிராதில் சொல்லியுள்ளதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வா.சா.ஆ.1 பத்திரத்தை தவிர வேறு ஆவணம் இல்லை. வழக்கு சொத்தில் எனது தாத்தா 1941ல் சின்னஅன்னச்சாமி கோவிலை கட்டியதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்தான சக்தி மாரியம்மன் கோவிலுக்கு டிரஸ்டியாகவும், பூசாரியாகவும் இருந்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. எனது தாத்தா நாக குடும்பன், எனது அப்பா கருப்பையா மற்றும் எனது பெயரில் வழக்கு சொத்தில் டிரஸ்டியாக இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மின்கட்டண ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா இறப்பிற்கு பின் நானும் எனது சகோதரர்களும் வழக்கு கோவில் பூசாரியாக இருந்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2008க்கு பின் வழக்கு கோவில் நான் பூசாரியாக இருந்ததாக மின்கட்டண ரசீதுகளையும், புகைப்படங்களையும் தாக்கல் செய்துள்ளேன்.

7. சக்தி மாரியம்மான் கோவிலுக்கு நான் தான் பூசாரி என்று அடையாள அட்டை, கோவில் நலவாரியப் புத்தகம் ஆகியவற்றை நான் வாங்கவில்லை, சகோதராகள் மூன்று பேர் இருப்பதால் எனது பெயருக்கு தனியாக தரவில்லை. எனது தாத்தாவும், எனது

அப்பாவும் பரம்பரை பூசாரி என்று இந்து அறநிலையத்துறையில் அடையாள அட்டை வாங்கினார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

8. சக்தி மாரியம்மான் கோவிலுக்கு 1ம் பிரதிவாதி தான் பூசாரி என்று அடையாள அட்டை, கோவில் நலவாரியப் புத்தகம் ஆகியவற்றை பெற்றுள்ளார் என்றால் அவர் வழக்கிற்காக சட்டத்திற்கு புறம்பாக பெற்று உள்ளார். கச்சைக்கட்டி தெற்கு தெருவில் உள்ள மக்கள் சாமிகும்பிட கூட்டம் போட்டு போடுவார்கள் என்றால் சரிதான். மேற்படி கூட்டம் மற்றும் சயனம் கேட்டல், காப்பு கட்டுதல் ஆகியவற்றை 1ம் பிரதிவாதி மூலம் தான் செய்வார்கள் என்றால் சரியல்ல. கோவிலில் வேப்பங்குலை சொருகுவதையும், சக்தி கரகம் எடுப்பதையும் 2,3,4 பிரதிவாதி செய்வார்கள் என்றால் சரியல்ல.

9. மேற்படி சம்பரந்தாயங்களை நானும்,ள எனது சகோதார்களும் செய்வதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சக்தி மாரியம்மன் கோவில் கரகத்தை 1ம் பிரதிவாதி தான் சுமப்பார் என்றாலும், அப்போது 2ம் பிரதிவாதி தேங்காய் பழம் கொடுப்பார் என்றாலும், அபிஷேகம் செய்வர் என்றால் சரியல்ல. திருவிழா காலத்தில் ஏற்படும் செலவு அனைத்தையும் 5,6 பிரதிவாதிகள் தான் செய்வார்கள் என்றாலும் அதை என் சகோதார்கள் செய்வதாக பிராதில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. நீலமேக பெருமாள் கோவில் பட்டாபிஷேக திருவிழாவை வடக்கு மற்றும் தெற்கு தெரு மக்கள் சேர்ந்து நடத்துவார்கள் என்றால் சரிதான். நீலமேக பெருமாள் கோவில் பட்டாபிஷேக திருவிழாவின் போது சக்தி மாரியம்மன் கோவில் மற்றும் மாரியம்மன் கோவில் பூசாரிக்கும் பரிவட்டம் கட்டுவார்கள் என்றால் சரியல்ல. எங்கள் ஊரின் தெற்கு தெரு மக்களின் சமுதாய தலைவர் (காலாடி) என்ற பொறுப்பு எனக்கு இருந்தது என்றாலும், அதன் அடிப்படையில் தான் கோவில் நலனுக்காக புகார் கொடுக்கவும், வழக்கு நடத்தவும் என்னை முன்னிலைப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல.

11. பிரதிவாதிகளும் வழக்கு கோவிலுக்காக திருவிழா நடத்த புகார் கொடுப்பது, வழக்கு நடந்தது போன்றவற்றை செய்துள்ளார்கள் என்றால் இந்த வழக்கிற்காக அவற்றை செய்துள்ளார்கள். சக்தி மாரியம்மன் கோவில் கட்டிய காலத்திலிருந்து 1ம் பிரதிவாதி தந்தை பெயரில் தான் மின் கட்டணம் செலுத்தப்படுகிறத என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் பெற்ற இடைக்கால உறுத்து கட்டளை உத்தரவை வைத்து வழக்கு

கோவிலின் மின் இணைப்பை எனது பெயருக்கு மாற்றி கொண்டேன் என்றால் சரியல்ல மாண்மிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி மாற்றினேன்.

12. மேற்படி எனது பெயருக்கு மாற்றிய மின் இணைப்பு பற்றி தெற்கு தெருமக்களுக்கு தெரிந்து மனு கொடுத்து 1ம் பிரதிவாதி பெயருக்கு மின் இணைப்பு மாற்றினார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் செல்வாக்கை வைத்து மாற்றி கொண்டார். வழக்கு கோவிலின் மின் இணைப்பு தற்போது வரை 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, எனது பெயரில் இருந்ததை மாற்றிக்கொண்டார். வழக்கு கோவிலின் திருப்பணிக்கு அறநிலையத்துறை 50,000/– கொடுத்தை காலாடி என்ற முறையில் நான் பெற்றேன் என்றால் சரியல்ல, பூசாரி என்பதால் பெற்றேன்.

13. சின்ன மாரியம்மன் கோவில் வழக்கு சொத்தில் அமையவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ,2 உத்தரவை நாகலிங்கம் பெயரில் பெற்று உள்ளேன் என்றாலும் பூசாரி மற்றும் டிரஸ்டி என்று குறிப்பிட்டு பெறவில்லை என்றால் அந்த மனுவில் குறிப்பிட்டு இருந்தேன். வா.சா.ஆ,3 உத்தரவிலும் என்னை தலைவர் என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் டிரஸ்டி, பூசாரி என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

14. வா.சா.ஆ.4 உயில் ஆவணத்தில் வழக்கு சொத்தைப்பற்றியும், அதன் பூசாரி, டிரஸ்டி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் எனது தாத்தா அவரை டிரஸ்டி, பூசாரி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 உத்தரவை நான் நிர்வாகி என்று குறிப்பிட்டு பெற்று உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னை பூசாரி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் போலீஸாரிடம் கொடுத்த புகாரில் என்னை பூசாரி என்று நானாகவே எழுதி கொண்டேன் என்றால் சரியல்ல.

15. வா.சா.ஆ.8,9,12 ஆவணங்களில் எனது பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பூசாரி, டிரஸ்டி என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.24 மனுவின் பெயரில் உத்தரவு ஏற்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 18 முதல் 25,27,28 ஆவணங்கள் இடைக்கால உத்தரவுக்குப்பின் வழக்கிற்காக என்னால் உருவாகப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26 உத்தரவை நாகலிங்கம் பெயரில் பெற்று உள்ளேன் என்றாலும் பூசாரி மற்றும் டிரஸ்டி என்று குறிப்பிட்டு பெறவில்லை என்றால் சரியல்ல.

16. நான் புறம்போக்கு பாதையை ஆக்கிரமிப்பதை ஊர் மக்கள் அகற்ற சொல்லியதால் அவர்கள் மீது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்காது என்றால் சரியல்ல. வழக்கு கோவிலுக்கு இன்று வரை 1ம் பிரதிவாதி தான் பூசாரியாக உள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும் ஆவணங்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.